## மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2016

---

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான நிதி செயல் திறன் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1981 இன் 66 ஆம் இலக்க மஹாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ் அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் விவரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக, பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக் கூற்று, நிதி செயல் திறன் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரம் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன். ஆகையால், இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் பற்றிய கருத்துக்கள்

### 2.2.1 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள்

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முழு உரிமையுடனான இரு துணை நிறுவனங்களான வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் மற்றும் வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் ஒருங்கிணைப்பதன் மூலம் 2013 ஆம் ஆண்டு முதல் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்கு தயாரிக்கப்பட்டு சமர்பிக்கப்படவில்லை. மேலும், ஐம்பது சதவீத பங்கு உரிமை கொண்ட தேசிய லொத்தர் சபையின் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களை ஒருங்கிணைப்பதன் மூலம், குழு கணக்குகள் தயாரிக்காமை பற்றி நிதிக்கூற்றுக்களில் எந்த வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்படவில்லை

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

.

(அ) நிதி அறிக்கையிடலிற்கான கருத்தமைவு கட்டமைப்பின் பந்தி 4.56 இன் படி, நிறுவனம் வரலாற்று செலவினையோ அல்லது வேறு எந்த செலவையோ அடிப்படையாக கொண்டு அதன் நிதி கூற்றுகளை தயாரிக்க வேண்டும் மற்றும் அந்த குறிப்பிட்ட அடிப்படையை நிதி கூற்றுகளில் வெளிப்படுத்த வேண்டும். நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் நிதி கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படை வெளிப்படுத்தபடவில்லை.

**(ஆ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 7**

i. நியமத்தின் பந்தி 8 இன் படி, நிதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கொண்டு செல்லும் தொகை வகைப்படுத்தப்படுத்தப்படுவதுடன் நிதி நிலைமைக் கூற்று அல்லது கணக்குகளுக்கான குறிப்புகளில் காட்டப்பட வேண்டும்.எவ்வாறாயினும், நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அதன் படி செயற்படவில்லை.

ii. நியமத்தின் பந்தி 31 மற்றும் 33 இன் படி, நிதி இடர் முகாமைத்துவம் வெளிப்படுத்தபட வேண்டிய போதிலும், நம்பிக்கைப் நிதியம் அதன் படி வெளிப்படுத்தலை மேற்கொள்ளவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1**

i. பந்தி 10 (இ) இன் படி, நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் நிதிக் கூற்றுக்களுடன் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று சமர்பிக்கப்படவில்லை.

ii. நியமத்தின் பந்தி 60 இன் படி, நிதியத்திற்கு உரிமையான ரூபா 9,027,951,695 பெறுமதியான நிதி சொத்துக்களானது, நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறையல்லா சொத்துக்கள் என தனியாக அங்கீகரிக்கப்படவில்லை.

iii. நியமத்தின் பந்தி 99 இன் படி, வருமானம் மற்றும் செலவு கணக்குகள், நிதியத்தின் செலவின் தன்மை மற்றும் செயற்பாடு ஆகியவற்றின் அடிப்படையிலான வகைப்படுத்தலை பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும்.எனினும் அது அவ்வாறு செய்யப்படவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நியமத்தின் பந்தி 15 இன் படி, சொத்துக்கள் ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் ஒரு சொத்தாக அங்கீகரிக்கப்படுவதற்கான தகுதி அதன் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்ற போதிலும், இது புத்தகப் பெறுமதியில் கணக்கில் கொண்டு வரப்பட்டது.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18**

நியமத்தின் பந்தி 30 (அ) இன் படி, வட்டியானது பயனுள்ள வட்டி வீதத்தை பயன்படுத்தி அங்கீகரிக்கப்பட வேண்டும். எனினும், வட்டியானது அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டது.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24**

நியமத்தின் பந்தி 25 மற்றும் 26 இன் படி , தொடர்புபட்ட கட்சியின் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், இது நம்பிக்கைப் நிதியத்தால் வெளிப்படுத்தப்படவில்லை.

**(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39**

நியமத்தின் பந்தி 45 இன் பிரகாரம், முதலீட்டு போர்ட்போலியோவை முகாமைத்துவம் செய்வதாக கூறப்பட்ட வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசனால் சமர்ப்பிக்கப்படும் கணக்குகளின் படி கம்பனியின் வரவு மீதிகளான ரூபா 5,106,669,232 பெறுதியான திறைசேரி முறிகள், ரூபா 395,461,300 பெறுதியான திறைசேரி உண்டியல், ரூபா 1,102,010,859 பெறுதியான மீள் விற்பனைகள், ரூபா 796,979,390 பெறுமதியான தொகுதிக்கடன், ரூபா 486,128,823 பெறுதியான சொத்து மீட்கும் நம்பிக்கை சான்றிதழ்கள் மற்றும் ரூபா 270,448 பெறுதியான நடைமுறை கணக்கு மீதிகள் மற்றும் மீள் கொள்வனவு செலவு மீதி ரூபா 1,138,209 ஆகியன நிதி நிலைமை கூற்றில் வகைப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்படவில்லை.

**(ஏ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு சொந்தமான 2005 ஆம் ஆண்டில் ரூபா 12,460,179 ஆக கணக்கில் காட்டப்பட்ட மாலபேயில் அமைந்துள்ள 25 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் குத்தகைக்கு விடப்பட்டிருந்த இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனமானது (எஸ்எல்ஐஐரி) நியமத்தின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் நம்பிக்கை நிதியத்தின் தனிப்பட்ட சொத்தாக கணக்குகளில் காட்டப்படவில்லை. இதற்கு மேலாக குறிப்பிட்ட சொத்து நிதி கூற்றுகளில் நடைமுறை பெறுமதியில் மதிப்பிடப்படவில்லை மற்றும் வெளிப்படுத்தப்படவில்லை.

## 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பாண்டில் 7 மாதத்திற்கான கட்டிட வாடகை தொடர்பாக ரூபா 1,921,500 பெறுமதியான செலுத்த வேண்டிய தொகை கணக்கில் கொண்டு வரப்படவில்லை.

(ஆ) அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் படி, மதிப்பாண்டில் ரூபா 828,989,083 தொகையானது ஜனாதிபதி நிதியத்தில் இருந்து அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாப பங்காக நம்பிக்கை நிதியத்திற்கு உரித்தான இலபத்திற்கான பங்காக உள்ளது.இருப்பினும் இது ரூபா 680,044,729 ஆக நிதி கூற்றுகளில் குறிப்பிடப்பட்டதோடு ரூபா 148,944,354 ஆல் குறைத்து காட்டப்பட்டது.

### 2.2.4 விளக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசனால் முகாமைத்துவம் செய்யப்படும் மஹாபொல முதலீட்டு போர்ட்போலியோவின் மதிப்பாண்டுக்கான மீதியானது அக் கம்பனியால் சமர்பிக்கப்பட்ட கணக்குகளின் படி ரூபா 7,886,381,843 ஆன தொகையாக காணப்பட்டது. இருப்பினும் மஹாபொல நம்பிக்கைப் நிதியத்தின் நிதி நிலைமை கூற்றில் ரூபா 7,914,466,463 ஆக காணப்பட்டது.இதனால் ரூபா 28,084,620 விளக்கப்படாத வித்தியாசத்தை குறிக்கின்றது.

(ஆ) வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசனின் நிதிக்கூற்றுக்களின் படி மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு உரிமையான மொத்த சாதாரண மூலதனமானது மதிப்பீட்டு ஆண்டின் திசெம்பர் 31 இல் ரூபா 985,500,070. ஆக காணப்பட்டது. இருப்பினும் நம்பிக்கைப் நிதியத்தின் நிதி கூற்றின் படி ரூபா 985,000,000 ஆகும். இதனால் ரூபா 500,070 விளக்கப்படாத வித்தியாசத்தை குறிக்கின்றது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் 1980 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் 44 ஆம் பிரிவில், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்குரிய பங்களிப்பினை கணிப்பிடும் போது வாழ்க்கைச் செலவு படி உள்ளடக்கப்பட வேண்டும்.எனினும் அது அவ்வாறு செய்யப்படவில்லை மற்றும் நம்பிக்கைப் நிதியத்தினால் மதிப்பாண்டில் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்குரிய பங்களிப்பானது முறையே ரூபா 290,550 மற்றும் ரூபா 34,866 ஆல் குறைவாக செலுத்தப்பட்டது.

### 2.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பல பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் கட்டிட பணிக்காக பாடசாலை அபிவிருத்தி நிதியால் செலுத்த வேண்டிய மொத்த செலவுகளான ரூபா 3,832,874 ஆனது 2013 ஆம் ஆண்டில் இருந்து இதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காமல் நிதிக்கூற்றுக்களில் கொண்டு வரப்படுகிறது.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சம்ர்ப்பிக்கப்பட்ட நிதிகூற்றுக்களின் படி, 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 240,528,891 மிகையாக காணப்படுவதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 750,907,256 ஆக காணப்பட்டது.அதற்கமைய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மதிப்பாண்டு நிதி விளைவுகளில் ரூபா 510,378,365 ஆன வீழ்ச்சியை காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மஹாபொல புலமைப்பரிசில் கொடைக்கான கொடுப்பனவு ரூபா 501,401,690 ஆல் அதிகரித்தமை மேலே உள்ள வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக உள்ளது.

மதிப்பாண்டு மற்றும் 4 முந்தைய ஆண்டுகளிற்கான நிதி விளைவுகளின் பகுப்பாய்வானது 2012 ஆம் ஆண்டில் இருந்து மதிப்பாண்டு வரை ஏற்றத்தாழ்வுகளுடான மிகையை வெளிப்படுத்தப்படுகிறது. இருப்பினும், நிதி விளைவுகளிற்கு ஊழியர் சம்பளம் மற்றும் நடைமுறையல்லா சொத்திற்கான தேய்வினை மறுசீரமைப்பதால், 2012 ஆம் ஆண்டிற்கான பங்களிப்பு ரூபா 688,827,839 ஆனது 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,086,213,752 வரை அதிகரித்துள்ளது. மதிப்பாண்டில் இது தொடர்ச்சியாக ரூபா 302,031,160 ஆக குறைவடைந்துள்ளது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

நம்பிக்கைப் நிதியத்தினால் 2014 ஆம் ஆண்டில் இருந்து 2017 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட நிறுவன திட்டத்தில் அடைய எதிர்பார்த்த இலக்குகள் நிறுவன திட்டத்தில் பொருளாதார ரீதியாகவும் நிதியியல் ரீதியாகவும் குறிப்பிடப்படவில்லை. மற்றும் நிறுவன திட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படவில்லை.அதனால் முன்னேற்றத்தை மதிப்பிட முடியவில்லை.

#### 4.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் குறிக்கோளாக இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவியாக இரண்டாந்தர கல்வியினை திருப்திகரமாக பூர்த்தி செய்தவர்கள் அவர்களுக்கான கல்வி அல்லது தொழில்துறை கல்வியை தொழில்நுட்ப அல்லது உயர் கல்வி நிறுவனத்தில் பூர்த்தி செய்ய முடியும் என்பதாக இருந்த போதிலும், மதிப்பாண்டில் 5,120 மாணவர்கள் தொழில்நுட்ப கல்லூரியில் அனுமதிக்கப்பட்ட போதிலும் 1,500 மாணவர்களுக்கு மாத்திரம் மாதாந்தம் ரூபா 1,500 புலமைப்பரிசிலாக வழங்கப்பட்டது.

(ஆ) பாடசாலைகள்,நிறுவனங்கள், அடித்ததளங்கள் மற்றும் வேறு கல்வி நிறுவனங்களை நிர்மானித்தல் மற்றும் முகாமை செய்தல் போன்ற நிதியத்தின் இலக்குகளை அடைவதில் கவனம் செலுத்தவில்லை.

### 4.2 முகாமைத்துவ நடவடிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாய திணைக்களத்திற்கு சொந்தமான ரத்மலான விமான நிலையத்திற்கு அருகில் உள்ள நிலப்பகுதி சட்ட பூர்வமான முறையில் குத்தகைக்கு எடுக்கப்படாமல் நிதியத்தின் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,300,000 தொகை செலவு செய்யப்பட்டது. மற்றும் அதன் சாத்திய ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும் அந்த நிர்மானம் உள்நாட்டு விமான போக்குவரத்து அதிகாரத்தால் தடை செய்யப்பட்டது.ஆகையால் விவசாய திணைக்களம் நாராஹன்பிட்டியில் அதன் இடத்திற்கு ஒரு நிலத்தை வழங்க ஒப்புக் கொண்டது. இருப்பினும் அது வழங்கப்படவில்லை. நம்பிக்கை நிதியம் 1989 ஆம் ஆண்டில் ரூபா 5,600,000 தொகையை செலவழித்து நிலத்தை கொள்வனவு செய்தாலும் கூட பின்னர் அந்த நிலம் ரூபா 221,500,000 ற்கு விற்கப்பட்டது. மற்றும் அந்த நிதி மூலம் பாடசாலை அபிவிருத்தி சமூகம் ஸ்தாபிக்கப்பட்டது. மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஸ்தாபிக்கப்பட்டு 29 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் நம்பிக்கை நிதியத்தின் அலுவலகம் அந்த காலத்தில் 4 இடங்களில்

செயற்பட்டு வந்தது.ரூபா 18,379,695 தொகையான வாடகை 2011 ஆம் ஆண்டில் இருந்து 2016 ஏப்ரல் வரை செலுத்தப்பட்டது. மற்றும் 2016 மே இல் இருந்து ஜே ஆர் ஜெயவர்தன சென்ரரில் மாத வாடகையாக ரூபா 274,500 ற்கு போதுமான இட வசதியுடன் ஒரு இடம் கிடைக்கப் பெற்றது.

(ஆ) நம்பிக்கை நிதியத்தால் மதிப்பாண்டில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டு முறையே ரூபா 200,242,875 மற்றும் ரூபா 499,181,284 நட்டத்தை கொண்டிருந்த வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் இன் முதலீட்டு போர்ட்போலியோலின் சாதாரண பங்கின் நிதியில் இருந்து ரூபா 675,000,000 தொகை முதலீடு செயய்யப்பட்டது.

(இ) நம்பிக்கை நிதியசட்டத்தின் பிரிவு 6.2 (ஏ) (சி) மற்றும் (டி) இன் பிரகாரம், நம்பிக்கை நிதியம் நிதியினை அதிகரிப்பதற்கு மற்றும் உள்ளநாட்டு வெளிநாட்டு மூலகங்களில் இருந்து கொடை, பரிசு, பண அல்லது மானிய வகையிலான நன்கொடை பெறுவதற்கு மற்றும் அரசின் அனுமதியுடன் லொத்தர்கள் நடத்துவதற்க்கு அதிகாரம் உள்ளது. இருப்பினும் மதிப்பாண்டில் அத்தகைய மூலங்களில் நிதியை அதிகரிப்பதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் ரூபா 464,394,380 தொகையானது நிலையான வைப்பில் உள்ள முதலீட்டில் இருந்து பற்றப்பட்டது. இருப்பினும் இது சம்பள கொடுப்பனவுக்காக பயன்படுத்தப்பட்டது

**4.3 சர்ச்சைத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

---

பல்கலைக்கழக அனுமதியினை பொறாத மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப துறையில் உயர்கல்வியை வழங்குவதற்கான சந்தர்ப்பத்திற்காக நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்புடன் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் கட்டுவதற்கு அமைச்சரவை பத்திர இல 98/995/11/052 ஆல் 08 ஜுலை 1998 இல் அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் செயலாளரால் 28 ஜனவரி 1999 இல் தலைமை தாங்கப்பட்ட கூட்டத்தில் இடைக்கால ஏற்பாடக வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) தகவல் தொழில்நுட்ப நிறுவனமாக ஸ்தாபிக்கப்படுகிறது. மற்றும் இடைக்காலம் முடிவடைந்த பின்னர் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் கீழ் இந்த நிறுவனம் எடுத்துக்கொள்ளப்படுவதாக தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, ‘‘இலங்கை’’ இணை உள்ளடக்கி வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் அத்துடன் 1982 ம் ஆண்டு 17 ம் இலக்க கம்பனிச்சட்டத்துடன் கூட்டிணைக்கப்பட்டது. மற்றும் தேவையான நிதி வழங்குவதன் மூலம் வளப்பங்களிப்பு வழங்குவதற்கான பொறுப்பு மஹாபொல நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் கவனித்த விடயங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) இலங்கை வரையறுக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனத்துடன் 19 மார்ச் 2003 இல் மேற்கொண்ட உடன்படிக்கைப்படி (எஸ்எல்ஐஐரி) பல்கலைகழகம் மஹாபொல நிதியத்துக்கு சொந்தமான மாலபேயில் உள்ள 25 ஏக்கர் நிலப்பரப்பில் ஸ்தாபிக்கப்பட்டு 8 வருடகாலத்துக்கு முகாமைத்துவத்திற்காக கூறப்பட்ட கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டது. 14 நவம்பர் 2005 இல் உடன்படிக்கை முடிவடையும் காலப்பகுதிக்கு முதல் நம்பிக்கை நிதியத்திற்கும் வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் உடன்படிக்கை ஏற்பட்டது. மற்றும் பின்வரும் நிபந்தனைகள் நிதியத்திற்கு பயனுள்ளதாக இருந்தது. மற்றும் அசல் உடன்படிக்கையில் நீக்கப்பட்டு மற்றும் திருத்தப்பட்டு உள்ளடக்கப்பட்டது.

**நீக்கப்பட்ட நிபந்தனைகள்**

---

(i) பிரிவு 4 (இ) - மஹாபொல பல்கலைக்கழகத்திற்குரிய எல்லா சொத்துக்கள் மற்றும் வருமானங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எஸ்எல்ஐஐரி இன் வேறுகிளைகளினால் அல்லது ஏதாவது வர்த்தக நோக்கங்களிற்காகவோ நம்பிக்கை நிதியத்தின் குறிக்கோளிற்கு எதிராக பயன்படுத்த கூடாது.

(ii) பிரிவு 4 (எச்) - நம்பிக்கை நிதியத்தின் இணக்கத்துடன் பல்கலைகழகத்தின் மேம்பாட்டிற்கு செய்யப்படும் அனைத்து நடவடிக்கைகளும் செய்யப்பட வேண்டும்

(iii) பிரிவு 4 (ஐ) - கல்வி கற்கைகளை நடத்துவதில் இருந்து சம்பாதிக்கும் வருமானத்தை சேகரித்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் மேம்பாட்டிற்க்கு தேவையான செலவுகளை செலவழிப்பது என்பவை எஸ்எல்ஐஐரி இன் பொறுப்பாகும்.

(iv) பிரிவு 4 (ஜே)- பல்கலைக்கழகங்களை ஸ்தாபிப்பதன் நோக்கத்திற்காக தேசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து குறிப்பிட்ட அளவு கடன் நம்பிக்கை நிதியத்தால் பெறப்பட்டதை எஸ்எல்ஐஐரி உணர வேண்டும் மற்றும் எஸ்எல்ஐஐரி இன் நிதிநிலைமை நிலையாக இருக்கும் பொழுது தவணைக்கட்டணம் செலுத்துவதற்கு முயற்சியளிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

(v) பிரிவு 4 (கே)-நம்பிக்கைக்குழு முகாமைத்துவத்திற்காக, கணக்குகளை பரிசோதிப்ப தற்காக மற்றும் பல்கலைக்கழகத்தை மதிப்பிடு செய்வதற்காக திறைமையான முகாமையாளர்கள் மற்றும் கணக்காய்வாளர்களை உள்ளடக்கிய சுயாதீனமான குழுவினை நியமிக்கும் அதிகாரம் உண்டு. மற்றும் அறிமுகப்படுத்தும் புதிய கற்கை நெறிகளை மதிப்பிடு செய்வதற்காக தகுதியான கல்விகற்ற மற்றும் திறைமையான நபர்களைக்கொண்ட குழுவினை நியமிக்க முடியும்.

(vi) பிரிவு 4 (எல்)-நம்பிக்கை குழுவின் தீர்மானத்தின் படி, மாலபே பல்கலைக்கழகமானது மஹாபொல பல்கலைக்கழகம் என்ற பெயருடனும் மற்றும் புதிய மண்டபம் லலித் அதுலத்முதலி மண்டபம் எனவும் பெயரிடப்பட வேண்டும். மற்றும் அந்த பெயர்பலகைகள் கட்டிடத்தில் தெளிவாக காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(vii) பிரிவு 4 (எம்) - காலம் முடிவடைதல் அல்லது வேறு காரணங்களால் உடன்படிக்கை முடிவுறுத்தப்படும் போது நம்பிக்கை நிதியத்தால் நிதி அளிக்கப்பட்ட சொத்துக்கள் நம்பிக்கை நிதியத்தின் சொத்துக்களாக காட்டப்படும்.

**திருத்தப்பட்ட நிபந்தனைகள்**

-----------------------------------------------

(i) 2013 மார்ச் 19 இன் சட்ட உடன்படிக்கையின் பிரிவு 4 (எம்) இன் படி, ஏற்றுக்கொள்ளப்பட்ட முகாமைத்துவக் கட்டணத்தை கழித்த பின் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளில் இருந்து பொறப்பட்ட மிகை வருமானம் அடுத்த ஆண்டு ஜுன் 30 ம் திகதிக்கு முன்னர் நம்பிக்கை நிதியத்திற்க்கு செலவு வைக்கப்படும். மற்றும் நம்பிக்கை நிதியத்தின் உரிய அனுமதி இல்லாமல் பிறமுதலீடுகள் செய்யப்படமாட்டாது. இருப்பினும் எஸ்எல்ஐஐரி இன் இயக்குனர்சபை பல்கலைக்கழகத்தின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகாக ஒரு ஓதுக்க கணக்கிணைப் பேணுவதற்காக நம்பிக்கைக் குழுவின் அங்கிகாரத்தைப் பெறவேண்டும். எஸ்எல்ஐஐரி க்கு நம்பிக்கை நிதியத்துக்கு சொந்தமான நிலத்தின் புதிய குத்தகை உடன்படிக்கைக்குப் பதிலாக மேலே குறிப்பிடப்பட்ட ஒதுக்க கணக்கில் இருந்து அத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு தேவையான நிதியை நம்பிக்கை நிதியத்திற்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. மேலும் உடன்படிக்கையின் 5 (எ).(ஐ) இன்படி, எஸ்எல்ஐஐரி இன் வருடாந்த தேறிய லாபத்தில் ரூபா 8 மில்லியன் அல்லது வருடாந்த குத்தகை வாடகையின் 20 சதவீதத்தில் எது கூடவோ அது செலுத்தப்படும்.

(ii) நம்பிக்கை நிதியத்திற்க்கும் எஸ்எல்ஐஐரி க்கும் இடையில் 19 மார்ச் 2003 ஆம் திகதியில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரிவு 4 (எல்) இன் படி, பல்கலைக்கழக அபிவிருத்தி நடவடிக்கையின் சிபாரிசு செய்யும் உரிமை நம்பிக்கை குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது. மற்றும் பல்கலைக்கழகத்தை அபிவிருத்தி செய்வதற்கான அனைத்தும் நடவடிக்கைகளும் நம்பிக்கை நிதியத்தால் நடத்த வேண்டும். எனினும் 14 நவம்பர் 2005 இல் நம்பிக்கை நிதியத்திற்கும் எஸ்எல்ஐஐரி ற்கும் இடையில் இரண்டாவது உடன்படிக்கையின் பிரிவு 4 (இ) மற்றும் 4(எவ்) இன் படி, எஸ்எல்ஐஐரி இன் குறிக்கோளை அடைந்து கொள்வதற்கும், அதன் சுற்றறிக்கையை செய்தல், மாணவர்களை சேர்த்தல், கல்வி ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை முகாமை மற்றும் பராமரிப்பு நடவடிக்கை செய்தல் ஆகியவற்றிற்கு இயக்குனர் சபையால் எடுக்கப்படும் தீர்மானத்தின் படி பல்கலைக்கழக செயற்பாடுகளை நடத்துவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. மற்றும் முக்கிய கட்டிட தீர்மானத்தில் மாத்திரம் நம்பிக்கை நிதியத்தின் அனுமதி பெறப்பட்டது.

(ஆ) மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் எஸ்எல்ஐஐரி ற்கு சார்பாக செலவிடப்பட்ட முதலீட்டுக்கு பொருத்தமான தொகை ரூபா 373,579,392 ஐ திருப்பி செலுத்தியது. நம்பிக்கை நிதியத்தில் இருந்து ஒரு தனிப்பட்ட நிறுவனமாக வரையறுக்கப்பட்ட(உத்தரவாதம்) இலங்கை தகவல் தொழில் நுட்ப நிறுவனம் நிறுவப்பட்டது மற்றும் எஸ்எல்ஐஐரி நிர்மானிக்கப்பட்ட குத்தகைக்கு விடப்பட்ட நிலம் தொடர்பாக நம்பிக்கை நிதியம் 12 மே 2015 இல் வரையறுக்கப்பட்ட(உத்தரவாதம்) இலங்கை தகவல் தொழில் நுட்ப நிறுவனத்துடன் இரண்டு உடன்படிக்கை ஏற்படுத்தியது. மேலும் 2003 மார்ச் 19 இல் ஏற்படுத்தப்பட்ட அசல் ஒப்பந்தம் மற்றும் 14 நவம்பர் 2005 இல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட நம்பிக்கை நிதியத்திற்கு சாதகமான நிபந்தனைகளை அகற்றுவதன் முலம், பின்வரும் புதிய நிபந்தனைகள் கூறப்பட்ட இரண்டு உடன்படிக்கையின் முலம் ஏற்படுத்தப்பட்டது.

i. நம்பிக்கை நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுப் பொறுமதி ரூபா 373,579,392 மற்றும் மஹாபொல நம்பிக்கை நிதியத்தால் வழங்கப்பட்ட புலமை பரிசிலை உள்ளடக்கிய தொகை ரூபா 408,500,000 மற்றும் நம்பிக்கை நிதியத்திற்கான வேறு இடைநிலைச் செலவுகள் மற்றும் மஹாபொல நம்பிக்கை நிதியத்திற்கும் எஸ்எல்ஐஐரி க்கும் இடையில் உள்ள நிதியுறுதிப்பாட்டின்மை மற்றும் வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) இலங்கை தகவல் தொழில் நுட்ப நிறுவனமானது நம்பிக்கை நிதியத்தில் இருந்து சுயாதீன நிறுவனமாக செயற்படுகிறது.

ii. எஸ்எல்ஐஐரி ஆனது இலங்கை கணக்கீட்டு நியமம், இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் மற்றும் சர்வதேச கணக்கீட்டு நியமத்துக்கு உட்பட்டது அல்ல. 2015/2016 ஆம் ஆண்டு முதல் மஹாபொல நிதியத்திற்கு கணக்குகளை தருவதற்கு அல்லது கணக்குகளை ஒருங்கமைப்பதற்கு அவசியம் இல்லை.

iii. 15 மே 2015 இல் இருந்து 14 மே 2075 வரையிலான 60 வருட காலத்திற்கு மாலாபேயின் எஸ்எல்ஐஐரி அமைந்துள்ள குத்தகைக்கு எடுக்கப்பட்ட நிலத்தின் வருடாந்த குத்தகை வாடகை 5 வருடங்களிற்க்கு ஒருமுறை அதிகரிக்கப்படும். இதன் படி 14 மே 2020 இல் முடிவடையும் 5 ஆண்டுகளிற்கான வருடாந்த செலுத்த வேண்டிய வாடகை பொறுப்பு ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூபா 20 மில்லியன் மற்றும் 15 மார்ச் 2070 இல் இருந்து 14 மார்ச் 2075 இன் 5 வருட காலத்திற்கு வருடாந்தம் ரூபா 40 மில்லியன் ஆகும்.

iv. மாலபேயில் எஸ்எல்ஐஐரி க்கு குத்தகைக்கு விடப்பட்ட, மஹாபொல நம்பிக்கை நிதியத்திற்கு சொந்தமான நிலத்தை அல்லது அதன் பகுதியை துணைக்குத்தகைக்கு அல்லது அடமானம் வைப்பதற்கு மஹாபொல நம்பிக்கை நிதியத்திற்கு எழுத்துமூல அனுமதி இல்லை.

v. எஸ்எல்ஐஐரி ஆனது அவர்களது செலவில் கட்டிடங்களை கட்டுவதற்கு, பொருத்தமான வளாகத்தினுள் இயந்திரம் மற்றும் உபகரணங்களை பொருத்துதற்கு அல்லது புணரமைப்பு செய்வதற்கு பொருத்தமான நிலத்தில் நடவடிக்கைகளை முன்னேற்றம் செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

(இ) 14 நவம்பர் 2005 இல் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி நிலுவையிலிருந்து குத்தகை வாடகை ரூபா 98,642,356 ஆனது 12 மே 2015 இல் திருப்ப பெறப்பட்டது, நம்பிக்கை நிதியம் 12 மே 2015 இல் புதிய உடன்படிக்கையை கம்பனியுடன் ஏற்படுத்தி இருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு கிடைக்க கூடியதாக இருந்த ரூபா 45,358,379 குத்தகை வாடகை புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளின் படி ரூபா 20,000,000 வரை குறைக்கப்பட்டது. அமைச்சரவை தீர்மானத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் தொடர்பில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பாதகமாகவுள்ள இவ்வாறான உடன்படிக்கைகளை ஏற்படுத்துதல் அமைச்சரவை அங்கீகாரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 12 மே 2015 இல் நம்பிக்கை நிதியத்திற்கும் இலங்கை தகவல் தொழில் நுட்பத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் மூலம் கட்டிடத்திற்கான அனைத்து உரிமைகளும் அகற்றப்பட்டது. இருப்பினும் 2015 ஆம் ஆண்டு கட்டிடத்தின் அபிவிருத்திக்காக செலவழிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட கம்பனிக்கு கிடைத்த இலாபத் தொகையான ரூபா 1,038,092,883 ஆனது நம்பிக்கை நிதியத்தின் முதலீட்டு கணக்காக கொண்டுவரப்பட்டது. மேலும் அந்த தொகை (ரூபா 1,038,092,883) உள்ளடங்கிய ரூபா 1,064,520,695 தொகை மற்றும் தகவல் தொழில் நுட்ப நிறுவனத்திடம் இருந்து பெறவேண்டிய ரூபா 26,427,812 தொகையானது கட்டிடமாக கணக்கில் கொண்டுவரப்பட்டது.

## 5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்பித்தல்

2003 ஜுன் 02 ம் திகதி பொதுநிறுவனங்களின் சுற்றறிக்கையின் பிஃடி/112 ஆம் பிரிவின் 6.5.1 பிரிவின் படி, வரைவு ஆண்டறிக்கை நிதிக்கூற்றக்களுடன் கணக்குகளின் ஆண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும் நம்பிக்கை நிதியத்தின் 2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 08 மே 2018 இல் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

### 5.2 உள்ளக கணக்காய்வு

இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்திற்கான உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலமேனும் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

### 5.3.1 பெறுகைகள்

1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் அறக்கட்டளை சட்டத்தின் பிரிவு 6 (2) (டி) இன் கீழ், நிதியத்தின் குறிக்கோளை அடைவதற்காக பணத்தை சேகரிக்கும் குறிக்கோளுடன் 2013 ஜுலை 11 ம் திகதி இல 13/0773/54/008 அமைச்சரவை அனுமதியுடன் 2013 ஜுலை 30 இல் ''ஒன்லைன் லொத்தர்'' மீள் அறிமுகம் செய்யப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டது.

(அ) பாராளுமன்ற சட்டத்தின் 02 இன் கீழ் நிறுவப்பட்ட தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஊடாக ஒன்லைன் லொத்தரை பராமரிப்பதற்கான சாத்தியம் காணப்படவில்லை.

(ஆ) நம்பிக்கை நிதியம் குறிப்பிட்ட லொத்தரை தனியார் நிறுவனத்தினூடாக செயற்படுத்த நடவடிக்கை எடுத்தது. மற்றும் இதன் முலம் பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன.

i. கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரால் மேற்க்கொள்ளப்பட்ட முன்மொழிவின் படி முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களின் கீழ் லொத்தரில் 6 மில்லியன் முதலீட்டினை அமுல்படுத்துவதற்கான முதலீட்டாளரை தெரிவு செய்ய 5 உறுப்பினர்களை கொண்ட ''மஹாபொல லொத்தர் குழு'' என்ற விசேட குழு 2012 ஜுலை 12 இல் நம்பிக்கை சபையால் நியமிக்கப்பட்டது. எனினும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.7.2 (ஆ) பிரிவின் பிரகாரம்,பெறுகைகள் மதிப்பீட்டு குழு நியமிக்கபடவில்லை.

ii. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.1 வழிகாட்டலுக்கு எதிராக கேள்வி கோருவதற்காக நிலையான கேள்வி கோரல் பதிவேட்டை பயன்படுத்தவில்லை. அத்துடன் பயன்படுத்தப்பட்ட கேள்வி கோரல் பதிவேடு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவால் பரிசோதிக்கப் படவில்லை மற்றும் அங்கிகரிக்கப்படவில்லை.

iii. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 பிரிவின் பிரகாரம், 21 நாட்களை கொண்ட காலப்பகுதி கேள்வியை சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். எனினும் 10 நாட்கள் வழங்கப்பட்டு 3 கேள்வி மாத்திரம் பெறப்பட்டது.

iv. ஒரு கேள்வி மதிப்பிட்டு குழு நியமிக்கப்படவில்லை, விரிவான கேள்வி மதிப்பீடு நடை பெறவில்லை அதற்குப்பதிலாக லொத்தர் குழு கேள்வியை ஓப்பீடு மட்டும் செய்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.2 பிரிவின் பிரகாரம், தகுதி மற்றும் தகுதி தேவைகள் கேள்வி அழைப்புக்கான கோரிக்கையில் உட்படுத்தப்பட வேண்டும். எனினும் அந்த தேவை சேர்க்கப்படாமல், சமர்பிக்கப்பட்ட 3 ஏலப்பத்திரங்கள் தரப்பட்ட தகவல் தொளிவின்மையினால் நிராகரிக்கப்பட்டதாக கூறப்பட்டது.

v. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.12 ஆம் பிரிவின் படி, வினைத்திறனான போட்டியின்மை தெளிவுபடுத்தப்படும் போது பெறப்பட்ட அனைத்து கேள்விகளில் நிராகரிக்கப்பட்வையை நியாயப்படுத்த முடியும். இருப்பினும் அவ்வாறு இல்லாமல், பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.10 ஆம் பிரிவிற்கு முரணாக வேறு வளங்கள், நிதிநிலைமை மற்றும் அனுபவங்கள் ஆகியவற்றை தவிர்த்து முதலீட்டை மேற்கொண்ட

கேள்விதாரரை மதிப்பிடுவதற்கு பதிலாக, ரூபா 6 பில்லியன் பெறுமதியான கேள்வியை சமர்ப்பித்த வெளிநாட்டவர், கம்பனியின் முக்கிய முதலீட்டாளராக இருப்பது மதிப்பீடு செய்யப்பட்டது. மேலும், கம்பனியின் பதிவின் போது லொட்டரியை பராமரிப்பது ஒரு குறிக்கோளாக குறிப்பிடப்படவில்லை.

vi. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் படி, ஒரு முறையான ஒப்பந்த உடன்படிக்கையானது பெறுகைகள் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டும். இருப்பினும் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் ஒப்பந்ததை தயார் செய்தார். எனவே ‘‘மஹாபொல லொட்டரியை செயற்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளுக்கன வழிகாட்டுதல்’’ இன் 6,8,9,14,15,16,17 மற்றும் 20. குறிப்பிட்டுள்ள விடயங்கள் உடன்படிக்கையிலிருந்து நீக்கப்பட்டன. எனவே லொட்டரி நடவடிக்கை மற்றும் செயல் திறன் நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை இல்லாமல் இருந்தது.

vii. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரிவு 7.1 (பி) இன் அடிப்படையில் ஒப்பந்தக்காரர் காலாண்டில் முதல் திகதியின் போதே அல்லது அதற்கு முன்னர் நம்பிக்கையின் நிதியத்திற்கு காப்பீட்டை செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால்,ஒப்பந்தக்கார் 90 நாட்களுக்கு அது தொடர்பாக எழுத்துமுலம் அறிவிக்க வேண்டும் மற்றும் அந்த திகதியில் இருந்து 14 நாட்களுக்குள் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். 05 மே 2015 இல் இருந்து கொடுப்பனவு தவற விடப்பட்டிருந்தாலும் கூட, நம்பிக்கை நிதியம் ஒப்பந்தக்காரரிற்கு எழுத்து முலம் அறிவிக்கவில்லை. அதன்படி, 2015 ஓகஸ்ட் 17 இல் முடிவுறுத்தப்பட வேண்டிய ஒப்பந்தம் முடிவுறுத்தப்படாததால் 2016 செப்ரெம்பர் 15 இல் குறிப்பிட்ட ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது.எனவே,ஒரு தனியார் கம்பனி ‘‘மஹாபொல’’ என்ற கருத்தை பயன்படுத்துவதன் முலம் ஒரு வருடத்திற்கு மேலான காலப்பகுதியில் அதிக இலாபத்தை சம்பாதிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த திகதியில் நிலவையிலுள்ள தொகை ரூபா 673,913,043 ஆகும்.

(இ) நம்பிக்கை நிதியத்தின் அலுவலகத்தை நடத்துவதற்குரிய இடத்தை தெரிவு செய்வதற்காக தேவையான விபரங்களை அளிக்காமல், 2016 மே 14 இல் கேள்வி சமர்ப்பிப்பதற்குரிய இறுதி திகதி என குறிப்பிட்டு பத்திரிகை விளம்பரம் ரூபா 38,761 தொகையை செலவழித்து ஆங்கில ஊடகத்தில் பிரசுரம் செய்யப்பட்டது.எவ்வாறாயினும் 2016 மே 09 இல் நம்பிக்கை நிதியத்தால் மேற்கொண்ட வேண்டுகோளின் படி, 2016 மே 18 ஆம் திகதி ஜே ஆர் ஜெயவர்த்தன சென்ரரால் சமர்ப்பிக்கப்பட்ட மாத வாடகை ரூபா 274,500 உடனான கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டது. பத்திரிகை விளம்பரத்தின் படி பெறப்பட்ட கேள்விகளில் நிராகரிக்கப்பட்ட கேள்வியை விட ரூபா 294,000 மிகை கொடுப்பனவு ஆண்டு தோறும் செலுத்தப்பட்டது. மேலும் நம்பிக்கை குழுவால் எடுக்கப்பட வேண்டிய தீர்மானமனது இயக்குனர் மற்றும் ஒரு நம்பிக்கையாளர் எடுக்கப்பட்டது. மற்றும் இயக்குனர், ஒரு நம்பிக்கையாளர் மற்றும் உறுப்பினரகளால் எடுக்கப்பட்ட தீர்மானமானது அதன் பின் அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள** | | **அவதானிப்புக்கள** |
| --- | --- | --- |
| (அ) | உள்ளகக் கணக்காய்வு | கணக்காளர் பதவிக்கு ஓர் அதிகாரி நியமனம் செய்யப்படவில்லை. |
| (ஆ) | நிதி முதலீடு | முதலீட்டிற்கான உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமை மற்றும் முதலிட்டு நன்மையினை மதிப்பிடாமை. |
| (இ) | பெறுகைகள் | பெறுகைகள் வழிகாட்டில் கோவை, பெறுகைகள் கையேடு மற்றும் பெறுகைகள் திட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படாமை. |